*Government of Puducherry*
*Lieutenant Governor's Secretariat*

**No. LGS/PRO/2019** **28th May, 2019**

புதுச்சேரிவாழ் பொதுமக்களுக்கு எனது மனம் திறந்த மடல்!

**வணக்கம் !**

எதிர்வரும் 2019/05/29 அன்று நான் எனது பணிக்கான மூன்றாண்டுகளை நிறைவு செய்கிறேன்.

காலங்கள் கடந்தாலும் எனது பணியின் நினைவுகள் இன்னும் பசுமையாகவே இருக்கின்றன. இவற்றுள் பெரும்பாலானவை ஒரு ஒழுங்குபடுத்தபட்ட முன்னேற்றத்திற்கு வித்திட்டுள்ளன, இதற்காக நான் தொழில்நுட்பதிற்கு நன்றி கூறுகிறேன்.

எனது ஒவ்வொரு காலையும் இராஜ்நிவாசின்மேல் ஏற்றப்படும் தேசியக் கொடியின் குழலோசையினூடே வீசுகிறது.

இது எனது வாழ்வின் குறிக்கோளையும், எனது உள்ளுணர்வையும் தட்டி எழுப்பபி அதை எனக்கு உணரச் செய்கின்றது எனது உள்ளுணர்வு ., திட்டமிடுவதற்கும் பெரும்பாலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்க்கும் வழிவகை செய்கின்றது.

என் மீது நம்பிக்கை வைத்து, என்னைப் புதுச்சேரியின் துணை நிலை ஆளுநராகப் பணிபுரியச் செய்த மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களுக்கு நன்றி.

புதுச்சேரியின் நலனுக்காக இராஜ்நிவாஸ் பெரும் பங்கு ஆற்றியுள்ளது இதற்காகப் பாடுபட்ட மாண்புமிகு முதலமைச்சர் திரு நாராயணசாமி அவர்களுக்கும் மற்றும் அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் நான் நன்றி பாராட்டுகிறேன்.

புதுச்சேரியின் மாற்றத்திற்காக ஒத்துழைத்த தலைமைச் செயலர் திரு அஸ்வினி குமார் மற்றும் அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் நான் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரும்பாலான சவால்களை தமது அனுபவத்துடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும், எனது சிறப்பு பணி அதிகாரி திரு தேவநீதி தாஸ், இ.ஆ.ப. (பணி நிறைவு) அவர்களின் சீரிய தலைமையின் கீழ் உவந்து செயல்பட்ட இராஜ் நிவாஸ் குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமது மதிப்புமிக்க நேரத்தை எனக்காக ஒதுக்கி, காலம் நேரம் பாராமல் என்னுடன் சேவை புரிந்த தன்னார்வத் தொண்டர்களுக்கும், அரசு சாரா நிறுவனங்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் வெளிக்கொணர்ந்து அவற்றை விரைவாகத் தீர்க்க உதவிய ஊடகத்தினர்க்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுச்சேரியில் உள்ள அனைத்து தரப்பு மக்களுக்கும் காரைக்கால், மாஹே, ஏனாம் பிராந்திய மக்களுக்கும், அவர்களின் தாய்மொழியை நான் பேசாவிட்டாலும், என் மீது நம்பிக்கை கொண்டு நமது முயற்சிகளில் பங்குகொண்ட அனைவருக்கும் நான் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுச்சேரிக்கென தனிச் சிறப்புகள் பல உண்டு. சமுதாய ஒற்றுமையும், அமைதியும் நிறைந்த மாநிலம் புதுச்சேரி. தலைக்கவசம் அணிவது மற்றும் ஒருசில குற்றச்செயல்கள் தவிர மற்றபடி மக்கள் அனைவரும் பொதுவாக சட்டத்தை மதிப்பவர்களே.

வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் புதுச்சேரி தன்னகத்தே கொண்டுள்ளது. நல்ல அரசியல் தலைமை, மக்கள் பணியாற்றும் அரசு ஊழியர்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் பொறுப்புடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் தமது கடமைகளைச் செவ்வனே செய்து வந்தால் இந்த மாநிலம் மேலும் முன்னேறிய ஒன்றாகத் திகழும்.

இதற்காக சாதி, மத பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் நாடு வளம்பெறும்.

புதுச்சேரியின் முன்னேற்றத்திற்காக, நிர்வாகத்தின் பொருட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் செயலியின்(APP) வடிவில், புதுச்சேரிக்கான நினைவாகத் தரப்பட்டுள்ளது.

முடிந்த அளவு நான், புதுச்சேரியின் விளைவுகளை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

நன்றி !

தங்கள் உண்மையுள்ள

**(டாக்டர். கிரண் பேடி)**